<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

அ.வ.எண்.358/2021 வா.சா.2 விஜயகுமார்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 29.10.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1,3 ,4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) என் சாட்சிய வாக்குமூலத்தில் விவரங்கள் யார் கூறியது என்றால் வழக்கறிஞர் மூலமாக தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் சாட்சிய வாக்குமூலம் எங்கு தயார் செய்யப்பட்டது என்றால் டைப் ஆபிஸில் தயார் செய்யப்பட்டது .ஆனால் அதன் பெயர் தெரியாது. என் சாட்சிய வாக்குமூலம் தயார் செய்யும் முன் ஆவணங்கள் ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை.

2) என் சாட்சிய வாக்குமூலத்தில் 4 ம் பத்தியில் வழக்கு கிராமத்தில் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதர, சகோதரிகளுக்கு பூர்வீகமாக விவசாய பூமிகள் இருப்பதாக நான் கூறியுள்ள நிலையில் அவை பூர்வீகமானவை என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு எனில் அனுமானத்தின் பெயரில் தான் அச்சொத்துக்கள் பூர்வீகமானவை என கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் 1 ம் பிரதிவாதியால் அவர் பெயரில் கிரையம் பெறப்பெற்ற சொத்துக்கள் என்றால் சரியல்ல . பூர்வீக சொத்துக்கள் ஆகும். அச்சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என காட்டும் விதமாக நானோ , வாதியோ எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி என் சகோதரி மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) என் சகோதரி ராதாமணிக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் எப்போது திருமணம் நடைப்பெற்றது என்றால் கடந்த 1977 ம் ஆண்டு நடைப்பெற்றது ஆனால் தேதி ஞாபகம் இல்லை. மேற்படி இருவருக்கும் திருமணம் ஆகி சில மாதங்களே கணவன் மனைவியாக வாழ்ந்தனர் என்றும் அதன் பின்னிட்டு கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து விட்டனர் என்றும் சொன்னால் சரியல்ல. எத்தனை மாதங்கள் இருவரும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்தனர் என்றால் 2- 3 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் . அதன் பின்னிட்டு கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து என் சகோதரி தன் தாய் வீட்டிற்கு திரும்பி விட்டார் என்றால் சரிதான்.

4) என் சகோதரி 1 ம் பிரதிவாதியை பிரிந்த பின்னர் 1 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதியுடன் வாழ்ந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4, 5 பிரதிவாதிகள் இருவரும் 1, 3 பிரதிவாதிகளுக்கு பிறந்த மகன்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 1980 க்கு பின் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் கணவன் மனைவியாக நாளது தேதிவரை சேர்ந்து வசித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கிற்கு பின்னிட்டாவது அது பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை.

5) 1 ம் பிரதிவாதி என் சகோதரிடம் சொத்து கேட்டு பிரச்சனை செய்ததாக நான் சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. வாதி பிறக்கும் முன்பே 1 ம் பிரதிவாதியும் ராதாமணியும் பிரிந்து விட்டனர் என்றால் சரியல்ல. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். கடந்த 25-02-1983 ல் என் சகோதரி ராதாமணி 1 ம் பிரதிவாதியிடம் ரூ.25,000/- பெற்றுக் கொண்டு பின் ஜீவனாம்ச பாத்திய விடுதலை பத்திரம் ஒன்று எழுதி பதிந்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணம் பற்றி தெரிந்தும் தெரியாது என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) என்னிடம் காட்டப்படும் 25-02-1983 தேதியிட்ட பின் ஜீவனாம்ச பாத்திய விடுதலை பத்திரத்திலும் , 28-02-1983 தேதியிட்ட ரசீதிலும் ராதாமணி என உள்ள கையொப்பம் என் சகோதரியுடையதா என்றால் தெரியவில்லை. என் தந்தை பெயர் சண்முகவேலாயுதம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 25-02-1983 தேதியிட்ட பின் ஜீவனாம்ச பாத்திய விடுதலை பத்திரத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என் தந்தை சண்முகவேலாயுதம் உடையது என்றால் சரிதான். ( **25-02-1983 தேதியிட்ட பின் ஜீவனாம்ச பாத்திய விடுதலை பத்திரத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) 28-02-1983 தேதியிட்ட ரசீதிலும் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என் தந்தை சண்முகவேலாயுதம் உடையது என்றால் சரிதான். ( **28-02-1983 தேதியிட்ட ரசீதில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் பி.வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

7) 1ம் பிரதிவாதியும் ராதாமணியும் நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்று விட்டனர் என்றால் சரிதான். நான் என் சாட்சிய வாக்குமூலத்தில் 1 ம் பிரதிவாதி வாதிக்கும் அவரது தாயாருக்கும் ஜீவனாம்ச தொகையோ , பொருட்களோ , சொத்துக்களோ ஏதும் கொடுக்காமல் விவாகரத்து செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமை இல்லை என்றும் வாதி என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**2, 6 , 7 , 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

**(1, 3,4,5 பிரதிவாதிகளின் குறுக்குவிசாரணை அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. )**

**(11ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**ஒப்பம் /- ( மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி